பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 21 வியாழக்கிழமை 06.07.2023 கதிர் 237

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தோண்டல் பணிகள் இன்று தொடக்கம்

## சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு அழைப்பு இல்லை

முல்லைத்தீவு மாவட்டம், கொக்குத்தொடுவாயில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியை தோண்டும் நடவடிக்கைகள் நீதிமன்றக் கட்டளைப்படி இன்று மேற்கொள்ளப்படவுள்ளன. எனினும் இந்தப்பணிகளைக் கண்காணிப்பதற்காகச் சர்வதேச துறைசார் நிபுணர்கள், ஆர்வலர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நிலத்தடி குடிதண்ணீர்க் குழாக்களைப் பொருத்துவதற்காக வீதியோரம் குழி தோண்டப்பட்டபோது இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது.

அதில் பெண்கள் மற்றும் ஆண்களின் ஆடைகளும் எலும்பு உள்ளிட்ட மனித எச்சங்களும் காணப்பட்டன. குழிக்குள் மேலும் பல ஆடைகளும் மனித எச்சங்களும் இருப்பதை வெளியிலிருந்து பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அங்கு காணப்படும் ஆடைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் போராளிகள் அணிபவை போன்று இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போரின் இறுதி நாள்களில் படையினரிடம் சரணடைந்தவர்கள், குடும்பத்தினரால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் என்று பலர் காணாமலாக்கப்பட்டுள்ள பின்னணியில், போரின்போதும் அதற்குப் பின்னரும் படையினரின் முழுமையான ☞ 2

## இது ரகசியம் அல்ல!

வாசகர் ஒருவர் இடிமின்னல் மின் அஞ்சலுக்கு அனுப்பி வைத்திருக்கும் கருத்தை இங்கு அப்படியே வாசகர்களின் பார்வைக்குத் தருகின்றேன்.

எனது அவதானத்தின் படிக்கு, ‘இனி இது ரகசியம் அல்ல ‘ பகுதி ‘மஞ்சள் நிறப் ‘ பின்னணியுடன்தானே முதலாம் பக்கத்தில் தொடங்குகிறது. அதிலேதான் நீங்கள் சீனித்தொழிற்சாலை விடயத்தை எல்லாம் கிண்டிக் கிளறிக் கொண்டிருக்கிறீர்கள். அடிக்கடி அவற்றினை உன்னிப்பாகத் திரும்பத் திரும்பப் படிப்பதனாலோ என்னவோ அவையெல்லாம் அவர்களுக்கு மஞ்சள் கலராகவே தெரிகிறது.

‘காமாளைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்’.

ஆக, காலைக்கதிரை ‘மஞ்சள் பத்திரிகை‘ என அவர் அழைப்பதன் காரணம் ஏன் இதுவாக இருக்கக் கூடாது?

நீங்களும்தான் போட்டுவறுத்து எடுத்தால், அவர்களும் தான் என்ன செய்வார்கள்? பாவப்பட்ட ஜன்மங்கள்.

என்று அந்த வாசகர் தெரிவித்திருக்கின்றார். அவர் கருத்துப்படியே ரெலோவின் ☞ 2

## முல்லைத்தீவுக்கு புதிய செயலாளர்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராக உமாமகேஸ்வரனை நியமிக்க அமைச்சவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போதைய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பணியாற்றும் உமாமகேஸ்வரனே விரைவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

முல்லைதீவு மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய விமலநாதன் ஓய்வுபெற்றுச் சென்ற நிலையில் தற்போது பதில் செயலாளராக கனகேஸ்வரன் பணியாற்றுகின்றார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நிரந்தரச் செயலாளரை நியமிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது

## மத நல்லிணக்கத்தைக் காக்க விரைவில் புதிய சட்டம் வரும்

### அமைச்சர் விதுர தகவல்



மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பேச்சுச் சுதந்திரம் அல்லது மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் அவமதிக்க யாருக்கும் உரிமை இல்லை என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

நமக்கே உரிய கலாச்சாரம் மற்றும் உணவு முறைகளில் இருந்து ☞ 2

## சதித்திட்டம் மூலம் இந்த அரசை ஒருபோதும் கவிழ்க்க முடியாது

### சந்திரசேன எம்.பி. தெரிவிப்பு

சூழ்ச்சித் திட்டங்கள் மூலம் தற்போதைய அரசை ஒருபோதும் கவிழ்க்க முடியாது என்று ஷ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஷ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயார் என்றும் அவர் கூறினார்.

அரசியல் சூழ்ச்சி மூலம் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது என்பதால் அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு எதிரணிகள் முன்வர வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (02)

## வவுனியாவில் கோர விபத்து: இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

வவுனியாவில் ஏ - 9 வீதியில் அமைந்துள்ள அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைக்கு அண்மித்த பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அதிகாலையில் பயணித்துக் கொண்டிருந்த கனரக வாகனத்தை ஏ - 9 வீதியில் அமைந்துள்ள அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைக்கு அண்மித்த பகுதியில் அதே பாதையில் பயணித்த மோட்டார் சைக்கிள் கனரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட சமயத்தில் எதிர்த் திசையில் வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹயஸ் ரக வாகனத்துடன் மோதுண்டு மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது.

600 மீற்றர் தூரம் வரையில் மோட்டார் சைக்கிள் தரையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணை ☞ 2

## நிர்வாகச் சீர்கேட்டை முடிவுக்குக் கொண்டு வந்து பனைவள அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுங்கள்

### ஆட்சியாளர்களிடம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வரும் பனை அபிவிருத்திச் சபையில் நிலவும் நிர்வாகச் சீர்கேட்டையும் முறையற்ற நியமனங்களையும் நிறுத்தி, பனை அபிவிருத்தி சபையை வினைதிறன் மிக்கதாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையின் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: .

பனை அபிவிருத்திச்சபையானது 1978ஆம் ஆண்டு தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், யாழ்ப்பாணத்தை தலைமை அலுவலகமாகக் கொண்டு, பனையை நம்பி வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பனைவளம் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது.

இலங்கையின் பனை வளமானது முழுமையாக வடககு - கிழக்கையே சார்ந்துள்ளது. ஏறத்தாழ 11இலட்சம் பனைகள் இங்கு இருப்பதாக அறியப்படுகிறது. ஆனால், இதைக் கொண்டு நடத்தும் பனை அபிவிருத்திச் சபையானது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் சங்கங்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு பனை வளத்தினை நம்பி வாழும் குடும்பங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. பனைவள அபிவிருத்தியும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது.

பனைவள உற்பத்தி மற்றும் கைவினைப்பொருட்கள் உற்பத்தி மட்டங்கள் ஒப்பீட்டளவில் கடந்தகாலங்களைவிட மிகவும் குறைவாகவே காணப்படுவதுடன், பனைவளத்தினைக் கொண்டு பல் வேறு வகையான உற்பத்திப் பொருட்கள் உற்பத்தி ☞ 2

## கொத்து, ப்ரைட் ரைஸ் விலைகள் குறைப்பு



கொத்து ரொட்டி மற்றும் ப்ரைட் ரைஸ் அகியனவற்றின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதற்கமைய நூற்றுக்கு 10 வீதத்தால் விலையைக் குறைக்கவுள்ளதாக ☞ 2

## இளம் குடும்பஸ்தர் விபத்தில் உயிரிழப்பு



நண்பனை வீட்டில் இறக்கி விட்டு தனது வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். ☞ 2

## நடாஷாவுக்கு பிணை கிடைத்தது



மத நல்லிணக்கத்தைச் சீர்குலைத்து பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படும் சமூகச் செயற்பாட்டாளர் நடாஷா எதிரிசூரியவுக்குக் கொழும்பு மேல்நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

இதேவேளை, அவரை ஜூலை 12 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் ☞ 2

## கேப்பாப்பிலவில் இராணுவம் கையகப்படுத்திய காணிகளை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க வலியுறுத்தி பொது மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கேப்பாப்பிலவு இராணுவ முகாம் எல்லையில் ☞ 2

## இளம் யுவதி ஒருவர் பட்டப்பகலில் கொடூரமாக வெட்டிப் படுகொலை!

### தென்னிலங்கையில் பயங்கரம்

இளம் யுவதி ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பிரதேசத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

21வயதுடைய எஸ்.ஜே. ரோஹிணி என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி வீட்டில் தந்தை, தாய் ஆகியோருடன் நின்ற வேளை ☞ 2

## மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வு தற்காலிக நிறுத்தம்

### அனைத்துத் தரப்பு இணக்கத்தோடு நடவடிக்கை



மன்னார், சதோச மனிதபுதைகுழி அகழ்வு தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கான கட்டளை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் ☞ 2

## 2017இல் முடியாது என்ற கரும்புச் செய்கை இப்போது மட்டும் சாத்தியமானது எப்படி?

### கேள்வி எழுப்புகிறார் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்

ந.லோகதயாளன்.

வவுனியா மாவட்டத்தில் கரும்புச் செய்கை மற்றும் சீனித் தொழிற்சாலை அமைப்பது பொருத்தமற்றது என்று 2017ஆம் ஆண்டே வவுனியா மாவட்டச் செயலராக இருந்தவரான பத்திரண அறிக்கை சமர்ப்பித்தார். அவ்வாறானால் தற்போது மட்டும் அந்தத் திட்டம் எவ்வாறு வவுனியா மாவட்டத்துக்குப் பொருத்தமாக மாறியது2

இவ்வாறு கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் லிங்கநாதன். வவுனியா, நைனாமடு சீனித் தொழிற்சாலை தொடர்பில் காலைக் கதிர் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்த ☞ 2

## எட்டு வருடங்கள் கழித்து கருவுற்ற கர்ப்பிணித் தாய் பரிதாப மரணம்!

### – வயிற்றில் இருந்த மூன்று குழந்தைகளும் சாவு

கர்ப்பிணித் தாய் ஒருவர் மூன்று குழந்தைகளைப்பெற்றெடுக்கத் தயாராக இருந்த நிலையில் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.



கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான 36 வயதான லவந்தி சதுரி ஜயசூரிய என்ற கர்ப்பிணித் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திருமணமாகி எட்டு வருடங்கள் கழித்து குழந்தையில்லாததால் ☞ 2

## இனி இது .....

பேச்சாளரான சுரேன் இராகவனின் மஞ்சள் பத்திரிகை விமர்சனத்திற்கான விளக்கம் இருந்துவிட்டுப்போனால் நல்லதுதான். ஆனால், அவர் இப்போது தொடங்கியிருக்கும் சுமந்திரன் பின்னணிப் பத்திரிகை என்ற புதிய கட்டுக்கதைக்கு இப்படி எங்கிருந்து புதிய விளக்கம்பிடிக்கமுடியும்என்று தெரியவில்லை. தவறான - வடக்கு மாகாணத்திற்குப் பொருத்தமற்ற-திட்டங்களை, தமது சுயநலன், வியாபார நலன் கருதிக் கொண்டுவந்துவிட்டுஅதுபற்றிக்அக்கறை செலுத்தும் ஊடகங்கள் மீது கற்பனைப் புனைகதைகளைக் கட்டவிழ்த்துவிட்டுத் திரிபவர்கள், மோசடி முறைகேடுகளுக்காகநீதிமன்றத்தில் விசாரணையைஎதிர்கொண்டிருப்பவர்கள் தங்களையும் அரசியல் திலைவர்களாக முன்னிறுத்தும் அவலம் என்றுதீர்கிறதோஅன்றுதான் தமிழர்களுக்கு விடிவு கிடைக்கும்.

................

தாய்லாந்து அன்பளிப்பாக வழங்கிய யானையை சகட்டுமேனிக்குக்கையாண்டதனால் இராஜதந்திர ரீதியாகப் பலத்த அடி வாங்கியிருக்கிறதுகொழும்புஅரசு. 30 வயதான முத்து ராஜா (சக் சரின்) என்கிற இந்த நீண்டதந்தங்களையுடைய யானையை இலங்கை மோசமாக நடத்தியமையை அடுத்து தனது நாட்டுக்கே திரும்ப அழைத்துக் கொண்டுவிட்டது தாய்லாந்து அரசு.

யானைக்கு மேலதிக சிகிச்சை வழங்குவதற்காகத்தான் அது தாய்லாந்துக்கு அனுப்பப்படுவதாக கொழும்பு ஆட்சியாளர்கள் தெரிவித்தாலும் தாம் தமது கலாசாரத் தூதுவராக இலங்கைக்கு வழங்கிய அந்த மிருகத்தை மிருகத்தனமாக இலங்கை நடத்தியதனால் கோபப்பட்டே அதனைத் தாய்லாந்துதிரும்பப்பெற்றுக் கொண்டுள்ளது.

முத்துராஜாவைமட்டுமல்ல இன்னும் இரண்டு யானைகளையும்தாய்லாந்து இலங்கைக்குஅன்பளிப்பாகவழங்கியுள்ளது. முத்து ராஜாவுக்கு நடந்தகதியைஅடுத்து, உலக நாடுகள்பலவற்றுக்கும்தான் வழங்கிய யானைகளின் ஆரோக்கியம்குறித்து ஆராய்வதற்குத்தாய்லாந்து முடிவெடுத்தது. அந்தந்த நாடுகளில் உள்ள தூதரகங்கள் மூலம் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், இலங்கைக்கு மட்டும்தாய்லாந்தில்இருந்தே ஒரு குழு அனுப்பப்பட்டது. எஞ்சியிருக்கும்இருயானைகளின் நிலமையையும் ஆராய்வதற்காக இந்தக்குழு அனுப்பப்பட்டது. அவற்றில் ஒரு யானை கண்டி தலதா மாளிகையில் வைத்துப் பராமரிக்கப்பட்டுவருகின்றது. தாய்லாந்தில் இருந்து வந்த குழுவினர் அந்த யானையைப் பார்ப்பதற்கு ஒதுக்கப்பட்ட நாளிற்கு ஒருநாள் முன்பாக அந்த யானையைக் கொண்டுபோய் ஒளித்துவிட்டார்கள். தாய்லாந்துக் குழுவினருக்கு யானைக்கு மதம் பிடித்திருக்கிறது, அதனால்இப்போதுஅதனைப் பார்ப்பதற்கு வாய்ப்பில்லை என்றுகடைசிநேரத்தில்செய்தி அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் குழுவினரோ நாங்கள் யானையைப் பார்க்கத்தான் வந்தோம், முத்துராஜா போன்று இதனையும் திருப்பிக் கொண்டு சென்றுவிடுவோம் என்று அச்சப்படாதீர்கள், யானையைக் காட்டுங்கள் என்று அதிகாரிகளிடம் கெஞ்சாதகுறையாகக்கேட்டுக் கொண்டி ருக்கிறார்கள். "யானை இப்போது எங்கிருக்கின்றது என்று எங்களுக்குத் தெரியவில்லை"என்கிறார்கள் தாய்லாந்து நாட்டவர்கள்.

இதற்கிடையில் ஜூலை 2 முத்துராஜாதாய்லாந்துக்குப் போய்ச்சேர்ந்தது. அங்குஅது 30 நாட்கள் தனிமைப்படுத்தலை எதிர்கொண்டுள்ளது. முதற்கட்ட மருத்துவப் பரிசோதனையில்அதன்ஒரு கண்ணில் கண்புரை நோய் ஏற்பட்டிருப்பதாகவும் அதன் ஒரு முன்னங்கால்களை மடிக்க முடியாது அவதிப்படுவதாகவும் அதன் இடுப்பின் இரு பக்கங்களிலும் ஆறாத காயங்கள் காணப்படுவதாகவும்நான்குகால்களின்நகங்களிலும் வலி இருப்பதாகவும் கண்டறியப்பட்டிருக்கின்றது.

யானைதன்பாட்டில்படுத்து எழும்புகின்றது, ஆனால் அதனால்தன்ஒருமுன்காலை மடிக்க முடியவில்லை. தனிமைப்படுத்தல் முடிந்ததும் அதற்கு முழுமையான மருத்துவச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை தொடங்கப்படும் என்று தாய்லாந்து அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இதற்கிடையில் முத்துராஜாவுக்குக் காலில் பெரும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுஅதுமருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகக் காண்பிக்கும் வகையில் சமூக ஊடங்களிலும் சில இணையத் தளங்களிலும் படங்கள் உலாவத் தொடங்கிவிட்டன. ஆனால்அந்தப்படங்கள்பொய்யானவை. அது தாய்லாந்தில் மற்றொரு யானைக்குக் காலில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுக் கவனிக்கப்படும் காட்சிகளே தவிர முத்துராஜாவுக்குச் சிகிச்சையளிக்கும் காட்சிகள் அல்ல.

முத்துராஜாதனதுதனிமைப்படுத்தல் காலத்தை முடித்த பின்னர்தான் அதற்கான முழுமையான சிகிச்சை தொடங்கப்படவுள்ளது.

இடிமின்னல்

(idiminnal23@gmail.com)

## மத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகியதன் காரணமாக நாம் நோய்வாய்ப்பட்ட தேசமாக மாறிக்கொண்டிருக்கின்றோம்.

பணத்திற்குமுன்னுரிமை அளிக்கும் சூழலில், இன, மத அடிப்படையில் மோதல்கள் ஏற்படும். போதைப்பொருள் பிரச்சினையும் தலைதூக்குகின்றது.

சிலர்மதசுதந்திரம்என்ற போர்வையில் ஏனைய மதங்களை விமர்சிக்கின்றார்கள். மத சுதந்திரம் என்ற போர்வையில்எந்த மதத்தையும்ஒடுக்கவும்,மதநல்லிணக்கத்தைஅச்சுறுத்தவும்யாருக்கும் உரிமை இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க புதிய சட்டமொன்றை கொண்டுவர எதிர்பார்க்கின்றோம்.

எந்தமதத்தையும்இழிவுபடுத்தாதவகையில்அதற்கான சட்ட வரைபை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க பதிலளித்தார்.

கேள்வி:

தேசிய மரபுரிமைகள் உள்ள இடங்கள் மற்றும் அதற்குஅண்மையில்வாழும் மக்களின் காணி உரிமை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில்புத்தசாசனஅமைச்சினால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

பதில்:

தொல்பொருட்கள் விவகாரத்தில் தொல்பொருட்கள் ஆணையை மீறி யாரும் செயல்பட முடியாது. எனவே தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்டத்தை அமுல்படுத்த எதிர்பார்க்கிறோம். தொல்பொருள்கட்டளைச்சட்டத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை, தற்பொழுதுள்ளதொல்பொருட்கள்கட்டளைச்சட்டம்அமுலில் இருக்கும்.

கேள்வி:

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மத அடையாள அட்டை பிக்குணிகளுக்கு வழங்கப்படுவதில்லைஎன்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

பதில்:

பௌத்த அலுவல்கள் திணைக்களத்திற்கு புதிய ஆணையாளர் நாயகம் நியமிக்கப்பட்டு குறுகிய காலமே ஆகிறது. எதிர்காலத்தில் இந்த அடையாள அட்டையை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பார். ஆனால் மகாசங்கத்தினரின் அறிவுறுத்தலின் பேரில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

கேள்வி:

சில பிக்குமாரின் செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக் காலமாக சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகளை நோக்கினால், புத்தசாசனத்தை அவமதிப்பதாக தெரிகிறது. சாசனத்தை அவமதிக்கும் பிக்குகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

பதில்:

ஒழுக்கக்கேடானசெயல்களில் ஈடுபடும் அல்லது சாசனத்தை அவமதிக்கும் வகையில் செயல்படும் பிக்குமார்கள் தொடர்பில் மகாசங்கத்தினரே செயற்பட வேண்டும்.

கேள்வி:

விகாரைகளில் வளர்க்கும் யானைகள் பற்றி தற்போது அதிகம் பேசப்படுகின்றது. அந்த யானைகள் சித்திரவதைசெய்யப்பட்டமை தொடர்பில் அமைச்சினால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பதில்:

வீட்டில் வளர்க்கும் பிராணிகளிடம் கருணை காட்ட வேண்டும். ஆனால் இவ்வாறான பிரச்சினை முதல் முறையாகவேஎழுந்துள்ளது. முத்துராஜா யானை தொடர்பான பிரச்சினையைத் தொடர்ந்து விகாரைகளில் யானைகள் கணக்கெடுக்கும் பணியைதொடங்கியுள்ளோம். அதன்பின், யானைகளின் உடல்நிலைகுறித்தும்ஆய்வு செய்யப்படும்.

கேள்வி:

கடலுக்கடியில் உள்ள தொல்பொருள் மதிப்புள்ள இடங்களை பாதுகாக்க அமைச்சுஎன்னநடவடிக்கை எடுத்துள்ளது?

பதில்:

கடற்படைத்தளபதியுடன் நடத்திய ஆலோசனையில், கடலுக்கு அடியில் உள்ள தொல்பொருள் இடங்களை அப்படியே பேணவும் அந்த இடங்களை சுற்றுலா தலமாக மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், எமது நாட்டிலிருந்து நெதர்லாந்து, இங்கிலாந்து, ஜேர்மனிபோன்றநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள பெறுமதிமிக்க தொல்லியல் பொருட்களை மீளப் பெறுவதற்குஅமைச்சுகலந்துரைடல்களை நடத்தி வருகிறது.

இலங்கையின் மரபுரிமையான பொருட்களை மீள வழங்க நெதர்லாந்து அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. மேலும், இங்கிலாந்தும் தங்களிடமுள்ள ஓலைச்சுவடிகளை வழங்க உடன்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்துமற்றும்நெதர்லாந்தில் சில காலமாக பாதுகாக்கப்பட்டு வரும் இந்த பொருட்களைஇலங்கைக்குகொண்டு வந்துஅந்தநாடுகளில்இருந்த அதே நிலையில் பாதுகாக்க முடியுமாஎன்ற கேள்விஎழுந்துள்ளது. அதனால்தான் இங்கிலாந்திலிருந்துஓலைச்சுவடிகளின் டிஜிட்டல் பிரதிகளைப் பெற திட்டமிடப்பட்டுள்ளது. (02)

## சீனித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டில்இருந்தபகுதியில் இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழர்கள் மத்தியில் பதற்றத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த நிலையில் இந்தப் புதைகுழியைத் தோண்டும்போது சர்வதேசக் கண்காணிப்பாளர்கள்பிரசன்னமாகி இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால், இன்று தோண்டும் பணிகள் தொடங்கும்போதுஅத்தகைய கண்காணிப்பாளர்கள்அங்கு வருவதற்கான அழைப்பை இலங்கை ஆட்சியாளர்கள் விடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## கொத்து, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரி வித்தார்.

தற்போது கொத்துரொட்டியானது 500 ரூபா முதல் 1300 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் ப்ரைட் ரைஸ் 350 ரூபா முதல் 1900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

அதேநேரம் சோறு 250 ரூபா முதல் 430 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும் பசும் பால் மற்றும் பால்மா கலவையுடனான தேநீர் மற்றும் தேநீர் ஆகியவற்றின் விலையில்எவ்விததிருத்தமும்மேற்கொள்ளப்படவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (02)

## இளம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.,கொடிகாமம், வரணி - சுட்டிபுரம் பகுதியில் நேற்றுஅதிகாலைஇடம்பெற்ற விபத்தில் வடமராட்சி, தேவரையாளி பகுதியைச்சேர்ந்த புஸ்பராசா ராஜ்குமார் (வயது 30)என்பவரேஉயிரிழந்தார்.

குறித்த நபர், சாவகச்சேரியைச் சேர்ந்த தனது நண்பனை அவரது வீட்டில் இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளில் வடமராட்சியில் உள்ள தனது வீடு நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த வேளை சுட்டிபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டைஇழந்துவீதியோரமாக இருந்த மரத்துடன் மோதிவிபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்தனர். (02)

## இளம் யுவதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கிய இருவர் வீட்டுக்குள் புகுந்து கூரிய ஆயுதத்தால் யுவதியைச்சராமரியாகவெட்டிவிட்டுத்தப்பியோடியுள்ளனர்.

கொலையாளிகள் முகத்தை மூடிய தலைக் கவசத்தை அணிந்தவாறு வந்துஇந்தவெறியாட்டத்தைப் புரிந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், யுவதியின் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

காதல் விவகாரமே கொலைக்குக்காரணம்என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த யுவதி அத்தனகல்லை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடந்த மூன்று வருடங்களாகக் காதலித்து வந்தார் என்றும், தனது பெற்றோரின் எதிர்ப்பையடுத்துக் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் காதலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உறவினர் ஒருவரைத்திருமணம்செய்யச் சம்மதம் தெரிவித்திருந்தார் என்றும் பொலிஸாரின் மேலதிக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், யுவதியின் முன்னாள் காதலன் கூலிக்கு ஆட்களை அமர்த்தி இந்தப்படுகொலையைச்செய்திருக்கக்கூடும் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்த யுவதியின் முன்னாள் காதலனையும், கொலையாளிகள் இருவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (02)

## எட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைபெற்றுக்கொள்ளும் ஆசையில்இருந்ததாகஅவரது கணவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவரது கணவர் அமில சமரவீர மேலும் தெரிவித்ததாவது:-

'எனதுமனைவிகுழந்தை கருத்தரித்ததால் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றின் விசேட வைத்தியரின் ஆலோசனைக்கமைய கடந்த 28 ஆம் திகதி ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அவர் 23 வாரங்கள் கருவுற்றிருந்தார். கடந்த 29 ஆம் திகதி இரவு அவர் சிரமப்பட்டார்.

30 ஆம் திகதி காலை தீவிரசிகிச்சைப்பிரிவில்அவர் சேர்க்கப்பட்டார். இரண்டாவது நாள் மதியம், மனைவி மற்றும்மூன்றுகுழந்தைகள் இறந்துவிட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் அலட்சியத்தால்இந்தத்துயரச் சம்பவம் நடந்துள்ளது.

இது தொடர்பில் முறைப்பாடு செய்யவுள்ளேன்.' - என்றார்.

தாய் மற்றும் மூன்று பிள்ளைகளின் இறுதிச் சடங்குகள் செவ்வாய்க் கிழமை மாலை இடம் பெற்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் ராகம போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரணவீர கருத்துத் தெரிவித்ததாவது:,

'கருவில்இருந்தகுழந்தைகளும் தாயும் உயிரிழந்தமைக்கு வைத்தியசாலை பொறுப்பல்ல.

உயிரிழந்த பெண்ணுக்குப் பல வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்த நிலையில் குழாய் மூலம் பிரசவத்துக்காகக் கருப்பையில் கருமுட்டை பொருத்தி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானசிகிச்சைகள் அரச வைத்தியசாலைகளில் செய்யப்படுவதில்லை. இவற்றை தனியார் வைத்தியசாலைகள் பல இலட்சம்ரூபாசெலவழித்துச் செய்கின்றன.

இதன்போது பல கருமுட்டைகளை பொருத்துகின்றார்கள். குறைந்தபட்சம்ஒரு முட்டையாவது நன்றாகப் போகும்என்றநம்பிக்கையில் இவ்வாறுசெய்யப்படுகின்றது.

எனினும்,இந்தத்தாய்க்கு மூன்று கருமுட்டைகளும் கருவுற்றிருந்தது. எவ்வாறாயினும், அவர்கடுமையாக நோய்வாய்ப்பட்டு ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தத் தாயையும் அவரது மூன்று குழந்தைகளையும் காப்பாற்ற வைத்தியசாலையின் ஊழியர்கள் கடுமையாக உழைத்தனர். எனினும், அவர்களின் உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை.' - என்றார். (02)

## நடாஷாவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம் நேற்று முற்பகல் உத்தரவிட்டிருந்த நிலையிலேயே கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுப் பிற்பகல் அவருக்குப் பிணை வழங்கியது.

சந்தேகநபர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பத்தின் அடிப்படையில் சந்தேகநபரை ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே உத்தரவிட்டார். (02)

## மன்னார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார். அத்தோடு இந்த புதை குழியில் இருந்து ஏற்கனவே 376 மனித எச்சங்கள் எடுக்கப்பட்ட நிலையில் இதனை மீண்டும் அகழ்ந்து மிகுதி மனித எச்சங்களை உடனடியாக எடுக்கத் தேவையில்லை என்று ஒட்டுமொத்த தரப்பினரின் இணக்கப்பாட்டுக்கு அமைவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார், சதோச மனித புதைகுழி வழக்கு நேற்று மன்னார் நீதிவான் மன்றத்தில்விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஏற்கனவே அழைக்கப்பட்ட 27 திணைக்களங்களின் பிரதிநிதிகள் சார்பில் பலர் மன்னார் நீதவான் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்

அத்தோடு அரச தரப்பு சட்டத்தரணி, அரச சட்ட வைத்திய அதிகாரி, பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணிகள், காணாமற்போனோர்தொடர்பானஅலுவலக சட்டத்தரணிகள், இராணுவ சட்டத்தரணி போன்றபலரும் வருகைதந்திருந்தநிலையில், இந்தப்புதைகுழியில்இருந்து ஏற்கனவே 376 மனித எச்சங்கள்எடுக்கப்பட்டநிலையில் இதனை உடனடியாக மீண்டும் அகழ்ந்து மிகுதி மனித எச்சங்களை எடுக்கத் தேவையில்லை என்று ஒட்டுமொத்த தரப்பினரின் இணக்கப்பாட்டுக்கு அமைவாக தீர்மானிக்கப்பட்டது

தற்போது இந்த மனிதப் புதைகுழியிலிருந்து மனித எச்சங்களைஎடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆனால் காணாமல்போனோர் தரப்பில் ஒட்டுமொத்த அறிக்கை (Comprehensive Report) என்ற அடிப்படையிலும் இதுவரையில் நடந்தது என்ன?இனிதொடர்ந்துஎன்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது, அவற்றை எவ்வாறுமேற்கொள்ளவேண்டும்போன்ற விளக்கங்களை சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஷ நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது

ஏற்கனவேஅகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் நீதிமன்றக்காப்பகத்தில்வைக்கப்பட்டிருக்கிறது அதை தரம் பிரிப்பு செய்யவேண்டியிருக்கின்றது. மனித எச்சங்கள் தனியாகவும் ஏனைய பொருட்கள் தனியாகவும்தரம் பிரிக்க வேண்டிய தேவை இருக்கிறது அதற்குப் பிற்பாடுதான் இதற்கான அறிக்கைசமர்ப்பிக்கவேண்டியிருக்கின்றது எனவே இது தொடர்பாக வைத்தியர் மீண்டும் அறிக்கைகள் சமர்ப்பிக்கவேண்டும்என்று நீதிமன்றம்கட்டளைஒன்றை ஆக்கியிருக்கிறது.

இதை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்என்றும் இதுவரை நடைபெற்ற அகழ் பணியில் கண்ட விடயங்கள் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாகவும் நீதிமன்றத்திற்கு வைத்தியர் ராஜபக்ஷ மற்றுமொறு அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் மன்று உத்தரவிட்டது.

அதுவரையான காலப் பகுதியில் குறித்த புதைகுழியை தூய்மையாகவும் அதே நேரம் முழு நேரம் பொலிஸர் முழுமையாக பாதுகாக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்

அதேநேரம்மேலதிகவிசாரணைகளுக்காக வழக்கு செப்டம்பர்13-வரைதிகதியிடப்பட்டது - என்றார்.

## கேப்பாப்பிலவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலிருந்து தொடங்கி, பேரணியாக கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை வந்தடைந்தது.

தொடர்ந்து இராணுவ முகாம் வாயில் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது காணிகளை விடுவிக்கவும், இராணுவத்தை வெளியேறுமாறும் வலியுறுத்தி பதாதைகளைத் தாங்கியிருந்தனர். தமது கோரிக்கைகளைவலியுறுத்தி முழக்கங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்தோடு இராணுவத்தினர்தமதுகாணிகளைக் கையகப்படுத்தி வைத்திருப்பதால் தமது அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர், இராணுவத்தினர்தமதுகாணிகளிலுள்ள வளங்களைச் சுரண்டுவதற்காகவும், நந்திக்கடலின் வளத்தைச் சுரண்டுவதற்குமாகவே தமது காணிகளை அபகரித்து வைத்துள்ளனர் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள' குற்றஞ்சாட்டினர்.

அதேவேளை, நீண்ட காலமாகத் தமது காணிகளை விடுவிக்குமாறு தாம் வலியுறுத்திவருகின்றபோதும் இதுவரையில்தமதுகாணிகள் விடுவிக்கப்படவில்லை என வும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் கதறி அழுது தமதுகாணிகளைவிடுவிக்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்டுக்கொண்டனர். அவ்வாறுகாணிளை இராணுவத்தினர் விடுவிக்கத் தவறின் இராணுவ முகாமிற்குள் அத்துமீறிநுழையவேண்டிய சூழல் எழும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரித்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் அங்கு மயக்கமுற்று வீழ்ந்தார். அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டது. (05)

## 2017இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் இதனைக் கூறினார்.

இந்தத்திட்டம்தொடர்பில் எந்தவொரு சாத்தியக்கூறு ஆய்வுகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. அமைச்சரவைப் பத்திரத்தில் சாத்தியகூறு ஆய்வை சீனித் தொழிற்சாலையை அமைக்கவுள்ள நிறுவனமே நடத்தும் என்று கூறப்பட்டுள்ளது. இது நகைப்புக்குரியது.

எந்தவொரு துறைசார் நிபுணர்களின் கருத்தோ அறிக்கையோ பெறப்படாது எவ்வாறு இந்தத் திட்டம் அமைச்சரவையின் அனுமதி வரையில் கொண்டு செல்லப்பட்டது.

சீனித்தொழிற்சாலையை அமைக்கவிட்டபின்னர்தான் கரும்புஉற்பத்திமேற்கொள்ள முடியுமா என ஆய்வில் ஈடுபடுவது என்பது பொருத்தமா என்ற மக்களின் நியாயமான சந்தேகத்திற்கு யார் பதிலளிப்பது?

இந்தத்திட்டத்திற்குதமது நிலங்களை மக்கள் வழங்க மாட்டார்கள் எனில் கண்டிப்பாக காடு அழிக்கப்பட்டே நிலம்வழங்கப்படவேண்டும். அதனையாவது ஏன் பகிரங்கமாகக் கூறவில்லை? காடு அழிப்பதில் உள்ள சாதக பாதக நிலையை அதில் கை தேர்ந்தவர்கள் ஏன் இன்னும் கவனத்தில் எடுக்கவில்லை?. இவ்வாறு பல கேள்விகள் உண்டு. இவை அனைத்திற்கும் மேலாக இத் திட்டத்தினால் மாவட்டத்தின்நீர்வளத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டே தீரும் என்று திடமாக கூறப்படுகின்றது. அது உண்மையானால்எவர் ஆதரித்தாலும் மக்களைதிரட்டிஇந்தத்திட்டத்திற்கு எதிராகப் போராடும் முதலாவது குடிமகனாக நான்தான் இருப்பேன் - என்றார்.

## வவுனியாவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தவிபத்தில்மோட்டார் சைக்கிளின் சாரதியான வவுனியா, குருமன்காடு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய சிவகுமார் ரூபீன்ஸ்ராஜ்என்றஇளைஞர் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய மூன்று வாகனங்களும் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (02)

## நிர்வாகச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யக்கூடியதாக இருந்தும் அவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுவதில்லை.

முதலாவதாக, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் இதன் தலைமைச் செயலகம் இருந்தபோதிலும்கூட, பல இலட்சரூபாய் வாடகையில் கொழும்பில் இன்னொரு தலைமைச் சங்கம் இயங்கிவருகிறது. இதன் காரணமாக, மிகப் பெருமளவிலான பனை வளத்தினை வடமாகாணம் கொண்டிருந்தபோதிலும்கூட, அதன் பயன் மக்களைச் சென்றடையவில்லை. பனை மரத்தைப் பற்றியோ அதன் பயன்பாடுபற்றியோஅறியாத சிங்களமொழிபேசும்தென்பகுதியைச் சார்ந்த ஒருவரை பனை அபிவிருத்திச்சபையின் தலைவராக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நியமித்தமை தவறானது. அவர் தென்பகுதியைச் சார்ந்தவராக இருப்பதால், தேவைக்கு மேலதிகமான வாடகையைக் கொடுத்து கொழும்பிலே நிர்வாகத்தை நடாத்துவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

நாடு இன்று எதிர்நோக்

தொடர்ச்சி 10 ம் பக்கம்

காலைக்கதிர் Kalaikkathir

# முறிகண்டி காவல் நிலையம் குறித்து மக்கள் முறைப்பாடு

மாங்குளம் தலைமை பொலிஸ் நிலையத்தின் கீழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகக் 2021 டிசெம்பர் 28 திறந்து வைக்கப்பட்ட முறிகண்டி காவல் நிலையம் தொடர்பில் பொதுமக்கள் குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகின்றனர். அங்கு முறைப்பாடு செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றனர்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொது மகன் ஒருவர் சேவையைப் பெறுவதற்காகக் குறித்த நிலையத்திற்குச் சென்றபோது அங்கு எவரும் காணப்படவில்லை எனவும், சிறிதுநேரம்கழித்துசாதாரண உடையில் நீராடிவிட்டுவந்த உத்தியோகத்தர் ஒருவர் ' கடமையில் யாரும் இல்லை தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நாடுமாறும் தெரிவித்தார் எனவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து இது குறித்து கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில்இவ்விடயம்தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார். பொது மக்களுக்கு உரிய சேவை வழங்க முடியாத முறிகண்டி காவல் நிலையத்தால் எவ்வித பயனும் இல்லை எனவும் பிரதேசமக்கள்தெரிவித்தனர். (05)

# மதுபான சாலைக்கு அனுமதிக்க வேண்டாம்; மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்









மன்னார் மாவட்டத்தில் நகரப்பகுதிக்குள்எந்தஒருமதுபானசாலைக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என கோரிக்கை விடுத்து கடந்த செவ்வாய்க்கிழமைமன்னார் நகர் பகுதியில் அடையாள கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பிரஜைகள் குழு, மகளீர் அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்தே இந்தப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். மன்னார் நகர மத்திய பகுதியில் ஆரம்பித்தஇந்தப்போராட்டம் நகர பகுதி ஊடாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் வரை நீடித்தது.

மன்னாரில் உள்ள கத்தோலிக்க மற்றும் இந்து ஆலயங்கள், பாடசாலை மற்றும் அதிக மக்கள் குடியிருப்பு அமைந்துள்ள பகுதியில் மதுபான சாலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான பகுதிகளில் மதுபான சாலைக்கு அனுமதி வழங்குவதால் அப்பகுதியில் விபத்துக்கள், முரண்பாடுகள் ஏற்படுவதற்கான வாய்புகள் காணப்படுகின்றன என போராட்டக்காரர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த போராட்டத்தில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், இந்து ஆலய குருக்கள், சட்டத்தரணிகள், நகரசபை உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். குறித்த போராட்டத்தின்இறுதியில்மதுபான சாலை அமைக்கு திட்டத்தைநிறுத்த கோரியும்மன்னார் நகர பகுதியில் மதுபான சாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்றும் வலியுறுத்தி, ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவிற்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் பிரதேச செயளாலரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# பாம்பன் பகுதிகளில் கடல் உள்வாங்கியது

## படகுகளுக்கு சேதம்

தெற்கு வங்கக் கடல் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சூறாவளி காரணமாக, திடீரென கடல் சுமார் 200 மீற்றர் உள்வாங்கியமையால், மீனவர்களின் படகுகள் சேதமடைந்துள்ளன.

தெற்குவங்கக்கடல்பகுதிகளின் மேல் வளி மண்டல சுழற்சியால் ஏற்பட்டுள்ள மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடுகாரணமாகநேற்று காலை முதல் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் தொடர்ந்து சூறைக்காற்று வீசியுள்ளது.

இதனால், பாம்பன் வடக்கே பாக்கு நீரினை கடல் பகுதி திடீரென சுமார் 200 மீற்றர் உள்வாங்கியதால் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாட்டு படகுகள் தரை தட்டி சேதமடைந்துள்ளன.

மேலும், அப்பகுதியில் அரியவகைபவளப்பாறைகள், நட்சத்திர மீன்கள், கடல் அட்டைகள்உள்ளிட்டவைகடலில் இருந்து வெளியில் தெரிந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதனால் மீனவர்களுக்கு மீன் பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



# கந்தளாயில் தொலைபேசி கோபுரம் வீழ்ந்து தபாலகத்துக்குச் சேதம்!

திருகோணமலை கந்தளாய் பகுதியில் உள்ள தொலைபேசி கோபுரம் வீழ்ந்ததில் தபாலக கட்டடம் சேதமடைந்துள்ளது. இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

பலத்த காற்று வீசியதன் காரணமாக தொலைபேசி கோபுரம் வீழ்ந்ததில் அருகில் உள்ள தபாலகக் கட்டடம் சேதமடைந்துள்ளது. தபாலகக் கட்டடத்துக்கு மேலால் இக் கோபுரம் வீழ்ந்ததில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. (05)

# இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவராக துமிந்த ஹூலன்கமுவ



இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் (சிலோன் சேம்பர் ஒப் கொமர்ஸ்) புதிய தலைவராக துமிந்த ஹூலன்கமுவ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 184 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே துமிந்த ஹூலன்கமுவ புதிய தலைவராகத் தெரிவாகியுள்ளார்.

அதேவேளை இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உபதலைவர் மற்றும் பிரதி உபதலைவராக முறையே ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவர் கிரிஷான் பாலேந்திரா மற்றும் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிங்குமல் தெவரதந்த்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க மேற்படி வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டிருந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஹிடேகி மிஸுகோஷி, அவரது உரையின் போது சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கு அமைவாகப் பல்வேறு மறுசீரமைப்பு செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

முக்கிய மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நிதியியல் உறுதிப்பாடுஎட்டப்படுவதுடன், அதன்மூலம் முதலீடுகளில் முன்னேற்றம் மற்றும் வணிகங்களுக்கு ஏற்றவாறான சாதகமான சூழல் ஆகியவற்றை அடைந்து கொள்ளமுடியும்.

வெளிப்படைத்தன்மையையும் செயற்திறனையும் இடைவிடாத்தன்மையையும் மேம்படுத்தக்கூடிய அத்தகைய மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு ஜப்பான் வலுவான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் ஹிடேகி மிஸுகோஷி உத்தரவாதம் அளித்துள்ளார்.

மேலும் கடன் வழங்குநர் நாடாக மாத்திரமன்றி, இலங்கையின் நீண்டகால நட்புநாடு என்ற ரீதியில் இலங்கையின் கடன்மறுசீரமைப்புச்செயன்முறையில் ஜப்பான் முக்கிய பங்காற்றும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# முன்னாள் போராளிகள் மதிப்புக்குரியவர்கள்

## அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவிப்பு



முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகள் கௌரவத்துக்கு உரியவர்கள் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இறுதி யுத்த காலம் வரை போராட்ட இயக்கத்தோடு ஒட்டிக்கொண்டு அரசியலையும் போரியலையும்நியாயமெனகூறியவர்கள் ஆயுதம் மௌனிக்கப்பட்ட பின்னர் தனது உண்மையான அரசியல் முகத்தை வெளிக்காட்டி போராளிகளை ஜனநாயகத் துரோகிகள் என வெளிப்படையாகவே கூறும் அரசியல் வாதிகளையே தற்போது காண்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் முன்னாள் போராளிகளையும், அரசியல் கைதிகளையும் அவமானப்படுத்தும் செயல் எனவும் இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (05)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆட்சிக்கு எதிரான சுவரொட்டிகள் மீட்பு



கொழும்பு தேசிய வைத்தியசாலையிலுள்ள அறையொன்றிலிருந்து, ஒருதொகை ஆட்சியாளர்களுக்கு எதிரான சுவரொட்டிகள்மற்றும்பதாகைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வைத்தியசாலையின்பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய, அவை மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 136 சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் கைப்பற்றப்பட்டதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் மருதானைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# 10 கோடி ரூபா பெறுமதியான தங்க ஜெல் கரைசலை அந்தரங்கப் பகுதியில் கடத்த முயன்ற யுவதி கைது



சுமார் 10 கோடி ரூபா பெறுமதியானதங்கஜெல்கரைசல் அடங்கிய 4 பொதிகளை தனது அந்தரங்கப் பகுதியில் மறைத்து வைத்து, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயற்சித்த கட்டுநாயக்க தீர்வையற்ற கடைத்தொகுதி ஒன்றின் பெண் ஊழியர் ஒருவர் செவ்வாய்க்கிழமை காலை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய இந்த யுவதி கட்டுநாயக்க விமான நிலைய சுங்கத் தீர்வையற்ற வர்த்தக வளாகத்தில் அழகு சாதனப் பொருள்கள்விற்பனைசெய்யும் நிறுவனத்தில் பணிபுரிபவராவார்.

செவ்வாய் காலை 8.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 5 கிலோவுக்கும் அதிகமான தங்க ஜெல் அடங்கிய 4 பொதிகளை தனது அந்தரங்கப் பகுதியில் மறைத்து வைத்து வெளியேற முயன்றபோதே விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார். (05)

# வடக்கு வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## மாகாணப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்

வடக்கில் உள்ள வைத்தியசாலைகளில் சில மருந்து பொருள்களுக்கான தட்டுப்பாடு காணப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மருந்துகள் இல்லாமல் நோயாளிகள் அசௌரியங்களுக்குஉள்ளாகின்றனர். இருப்பினும் சுகாதார அமைச்சின் மருந்து பிரிவுக்கு பொறுப்பானவர்கள் தொடர்ச்சியாக மருந்துகளை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவை போதுமானவையாக இல்லை. சில மருந்துகளுக்கு திடீரென தட்டுப்பாடு ஏற்படுகின்றபடியால் பொதுமக்கள் அந்த மருந்தை மருந்தகங்களில் வாங்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும். சத்தியமூர்த்தி குறிப்பிட்டார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பனை அபிவிருத்திச் சபையைக் கவனியுங்கள்

வடக்கின் பெரும் சொத்தான பனைவளத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட பனைவள அபிவிருத்திச் சபை எப்படிச் சீரழிக்கப்படுகின்றது என்பதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிக்கை ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

பனை அபிவிருத்திச் சபைக்குச் சிங்களவர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் கொழும்பில் ஒர் அலுவலகத்தைத் திறந்து அங்கு 25 சிங்களவர்களைப் பணிக்கும் அமர்த்தி சபையின் பணத்தை வீணாழப்பது குறித்தும், இலாபகரமாக இயங்கிவந்த திக்கம் வடிசாலை வடக்கின் அமைச்சர்களால் சூறையாடப்பட்ட பின்னும் இலாபகரமாக இயங்கியபோதும் கடந்த மூன்றாண்டுகளாக மூடப்பட்டிருப்பது குறித்தும் அந்த அறிக்கையில் சுரேஸ் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

“முதலாவதாக, வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் இதன் தலைமைச்செயலகம் இருந்தபோதிலும்கூட, பல இலட்ச ரூபாய் வாடகையில் கொழும்பில் இன்னொரு தலைமைச் சங்கம் இயங்கிவருகிறது. இதன் காரணமாக, மிகப்பெருமளவிலான பனை வளத்தினை வடமாகாணம் கொண்டிருந்த போதிலும்கூட, அதன் பயன் மக்களைச் சென்றடையவில்லை. பனை மரத்தைப் பற்றியோ அதன் பயன்பாடு பற்றியோ அறியாத சிங்கள மொழிபேசும் தென் பகுதியைச் சார்ந்த ஒருவரை பனை அபிவிருத்திசபையின் தலைவராக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நியமித்தமை தவறானது. அவர் தென்பகுதியைச் சார்ந்தவராக இருப்பதால், தேவைக்கு மேலதிகமான வாடகையைக் கொடுத்து கொழும்பிலே நிர்வாகத்தை நடாத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

பனை அபிவிருத்தி சபையானது கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, பருத்தித்துறை, திக்கம் பிரதேசத்தில் ஒரு வடிசாலையை நடத்தி வந்தது. மிகவும் இலாபகரமாக இயங்கிவந்த இந்த வடிசாலையினால் 3000 தொழிலாளர்கள் பயன்பெற்று வந்தார்கள். இந்த வடிசாலையானது பல்வேறு சந்தர்ப்பங்களில் வடக்கில் பொறுப்பாக இருந்த அமைச்சர்களினால் சூரையாடப்பட்டது. இவ்வளவு கொள்ளைகளும் சூரையாடல்களும் இடம்பெற்ற பின்னரும்கூட அது தொடர்ந்தும் இலாபத்திலேயே இயங்கி வந்தது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வடிசாலை மூடப்பட்டதன் காரணத்தினால் இந்த வடிசாலைக்கு கள்ளை விநியோகித்துவந்த தொழிலாளிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்” என்று அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரால் பனை அபிவிருத்திச் சபைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள் மூலம் இந்த அவல நிலை தோன்றியிருப்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இதனை அமைச்சர் கவனத்தில்கொண்டு உடனடி நடவடிக்கை எடுத்து நிலமையைச் சீராக்கவேண்டும்.

ஒருபுறத்தில் வடக்கு மாகாணத்திற்குப் பொருத்தமற்ற – அதன் நீர் வளத்திற்கு பாதகமான – கரும்புச் செய்கை மற்றும்சீனி உற்பத்தித் திட்டத்தைத் திணிப்பதற்கு முயற்சிக்கும் கொழும்பு ஆட்சியாளர்கள், மறுபுறத்தில் வடக்கின் பெரும் சொத்தான பனைவளத்தினை மேம்படுத்துவதற்குப் பதில் அதனைச் சீர்குலைக்கும் வகையிலும் செயற்பட்டு வருவதை சுரேஸின் அறிக்கை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

நீர் வளமும் நில வளமும் இல்லாத கரும்புச் செய்கையை வடக்கில் திணிப்பதில் அக்கறையோடு இருக்கும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கின் இயற்கையான வளமான பனையிலிருந்து பொருளாதாரப் பயன்களைப் பெறுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது முரண்நகை. இதுபோன்ற நடவடிக்கைகளே தெற்கின் திட்டமிட்ட இனவழிப்பு என்கிற விமர்சனத்தை எப்போதும் பெற்று வருகின்றன.

வடக்கின் பெரு வளமான பனைவளத்தை அபிவிருத்தி செய்வதன் மூலமும் அதன் வழியான உற்பத்தியை ஊக்குவித்து அவற்றுக்கு ஏற்றுமதியை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுவதன் மீது அரசுத் தலைவரும் ஆட்சியாளர்களும் கவனம் செலுத்த வேண்டும். தெங்குப் பொருள் உற்பத்திகள் ஏற்றுமதிச் சந்தையைக் குறிவைத்து ஊக்குவிக்கப்படுவதைப் போலவே பனைசார் உற்பத்திகளுக்கும் சர்வதேச சந்தைவாய்ப்பு ஏற்படுத்தப்பவேண்டும். அதற்கு முன்னர் பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாகச் சீர்கேடுகள் செம்மைப்படுத்தப்பட வேண்டும்.

# டயகமவில் புதிய மதுபானசாலையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குக

## மாவட்ட செயலாளருக்கு இராதாகிருஷ்ணன் கடிதம்

மலையக பகுதிகளில் புதிய மதுபான சாலைகளை திறந்து தொடர்ந்தும் இந்த மக்களை மயக்கத்தில் வைத்திருப்பதே அரசாங்கத்தினதும் அவர்களுக்கு துணைபோகின்ற அரசியல்வாதிகளதும் திட்டமாக இருக்கின்றது. இந்த மக்களை பொருளாதார ரீதியாக வலுவிலக்கச் செய்வதன் மூலமாக அவர்களின் எதிர்கால சந்ததியை தொடர்ந்தும் அடிமைத்தனமாக வைத்திருக்கவே இந்த அரசும் அவர்களுக்கு துணைபோகின்றவர்களினதும் திட்டமாக இருக்கின்றது என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட டயகம பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய மதுபானசாலைக்கு நாம் முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். இதனைத் தடுத்து நிறுத்த மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

இன்று நாட்டில் இருக்கின்ற பொருளாதார பின்னடைவு காரணமாக பாரிய பாதிப்பை சந்திக்கின்றவர்கள் மலையக மக்களே. இவ்வாறான ஒரு நிலையில் புதிய மதுபான சாலைகளை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருப்பதானது இந்த மக்களை அழிப்பதற்கான ஒரு திட்டமாகவே அதனை பார்க்கவேண்டியுள்ளது.

டயகம நகரில் ஏற்கனவே இரண்டு மதுபானசாலைகள் இருக்கின்றன. அங்கு ஒரு அரச கூட்டத்தாபன மருந்தாக்கல் கிளையை ஆரம்பிக்குமாறு நாம் பலமுறை கோரிக்கை வைத்திருந்தோம். அதனை கண்டு கொள்ளாத அரசாங்கம் இன்று புதிய மதுபான சாலைகளை திறப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதனை பார்த்துக் கொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படுகின்றவர்கள் தங்களுடைய இலாபத்தை நோக்கமாக கொண்டு செயற்படுகின்றனர். இதனை இந்த மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த மாவட்டத்தில் எங்குமே அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிளை கிடையாது.

குறைவான விலையில் மருந்துப் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கான வழியில்லை. ஆனால் அரசாங்கம் புதிய மதுபானசாலைகளை திறப்பதற்கு அனுமதி அளிக்கின்றது.

எதனை செய்ய வேண்டுமோ அதனை விட்டுவிட்டு எதனை செய்யக்கூடாதோ அதனை மும்முரமாக செய்து கொண்டிருக்கின்றது. இந்த அரசாங்கம் விலைவாசி அதிகரிப்பால் அன்றாடம் குடும்பங்களில் உணவிற்கே இந்த மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். அவர்களுக்கு மேலும் மதுபானத்தை கொடுக்க அரசும் அரசுடன் இணைந்திருக்கின்றவர்களும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மலையகத்தின் சாபக்கேடே இந்த மதுபானசாலைகள்தான். அதற்கு காரணம் மலையக அரசியல்வாதிகளே. என்னுடைய 30 வருடத்துக்கு மேற்பட்ட அரசியல் வாழ்வில் இதுவரையில் மதுபானசாலைகளுக்கான உரிமத்தையோ அதனை ஊக்குவிப்பதற்கோ கடுகளவேனும் நான் செயற்பட்டவனல்லன்.

எனவே, மலையகத்துக்கு இப்பொழுது தேவை மதுபானசாலகள் அல்ல. அவர்களின் வாழ்வாதார்த்துக்கான புதிய திட்டங்கள்.

ஏன் மலையகத்தில் மாத்திரம் புதிய மதுபானசாலைகளை திறப்பதற்கு அனைவரும் ஆர்வத்துடன் இருக்கின்றார்கள் என்ற கேள்வி எமக்கு எழுகின்றது. திட்டமிட்ட அடிப்படையில் எங்களை சீரழிக்கின்றார்கள் என்பது மாத்திரம் உண்மை. - என்றுள்ளது. (05)

# யாழ். புத்தூர் தாக்குதல்; தொடரும் கைதுகள் ஒரே ஊரைச் சேர்ந்த 58 பேர் இதுவரை கைது

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இரண்டு வீடுகளுக்குள் புகுந்து இரண்டு இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தி சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இதுவரையில் 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கடந்த 29 ஆம் திகதி 25 பெண்கள் உட்பட 31 பேர் கைது செய்யப்பட்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் 25 பெண்களும் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம் ஏனைய 06 ஆண்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் அச்சுவேலி பொலிஸார் ஞாயிற்றுக் கிழமை மூவரை கைது செய்திருந்த நிலையில் திங்கட்கிழமை 24 பேரை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் திங்கட்கிழமை வரையில் 58 பேரை கைது செய்துள்ளனர். புத்தூர் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் பெண்களின் படங்களை கணனி வரைகலை (கிராஃபிக்ஸ்) மூலம் ஆபாச படங்களாக மாற்றம் செய்து, அதனை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊரவர்கள் இணைந்து முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த 28 ஆம் திகதி இரவு ஊரில் உள்ள இரு இளைஞர்களே அவ்வாறு பெண்களின் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர் என குற்றம் சாட்டி , அந்த இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்து இளைஞர்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன் வீட்டினுள் இருந்த பெறு மதியான பொருள்களை அடித்து உடைத்தும் , வீட்டின் முன் நின்ற வாகனங்களை அடித்து உடைத்து , அவற்றுக்கு தீ வைத்துள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலி பொலிஸார் தாக்குதலில் காயமடைந்த இளைஞர்களை அங்கிருந்து மீட்டு , வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்ற போது , பொலிஸாருடன் முரண்பட்டு , பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதில் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் காயமடைந்த நிலையில் , நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற் கொண்டனர்.

அதனை அடுத்து அங்கு கூடியிருந்த ஊரவர்களை அவ்விடத்தில் இருந்து அகற்றி விட்டு , காயமடைந்த இரு இளைஞர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தொடர் கைது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# இலங்கைக்கான விமான சேவையை மீண்டும் ஆரம்பித்தது ‘ஏர் சைனா’




உலகம் முழுவதும் பரவிய கொரோனா தொற்றுக்குப் பிறகு சீன விமான நிறுவனமான ‘ஏர் சைனா’ மீண்டும் இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

குறித்த நிறுவனத்தின் முதல் விமானம் திங்கட்கிழமை இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

கொரோனா தொற்று காரணமாக சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர், இந்த சீன விமான நிறுவனம் இலங்கைக்கான விமான சேவையை தற்காலிகமாக நிறுத்தியது .

குறித்த விமானம் ஏ-320 ஏர்பஸ் ரக விமானம் பயன்படுத்தப்பட்டது. சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள செங்டு சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சீனா ஏர்லைன்ஸ் விமானம் சி.சி.ஏ.-425 ஏ-320 ஏர்பஸ் ரக விமானம் கடந்த திங்கட்கிழமை இரவு 08.20 மணிக்கு கட்டுநாயக்க விமானநிலையத்தைவந்தடைந்தது.அந்த விமானத்தில் 142 பயணிகளும் 09 விமான ஊழியர்களும் பயணித்தனர் .

குறித்த விமான சேவை ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சீனாவின் செங்டுவிலிருந்து இரவு 08.55 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைய திட்டமிடப்பட்டுள்ளது.

மீண்டும் அதே விமானம் கட்டுநாயக்காவிலிருந்து அதே நாளில் இரவு 10.15 மணிக்கு சீனாவின் செங்டுவுக்குப் புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா ஏர்லைன்ஸ் விமானத்தை வரவேற்க இலங்கைக்கான சீனத்தூதுவர் மற்றும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# சிறப்புமிக்க கதிர்காமத்தில் ஜனாதிபதி ரணில் வழிபாடு





ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திங்கட்கிழமை பிற்பகல் வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் புண்ணிய தலத்துக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கிரிவெஹெர விகாராதிபதி வண. கொபவக்க தம்மிந்த நாயக்க தேரரைச் சந்தித்த ஜனாதிபதி, நலம் விசாரித்தன் பின்னர் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார்.

பின்னர் ஜனாதிபதி சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

கதிர்காமம் வருடாந்த எசல மகா பெரஹறாவின் இறுதி நாளான திங்கட்கிழமை பெரஹறாவை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கந்துல ஹஸ்தி ராஜாவின் மீது தாது கலசத்தை ஸ்தாபித்தார்.

அதன் பின்னர் இறுதி பெரஹறாவை பார்வையிட்ட ஜனாதிபதி, கதிர்காமம் சமன் தேவாலயத்திற்கும் சென்று ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

கதிர்காமம் வருடாந்த எசல மகா பெரஹறாவை பார்வையிடவிகாரைக்குவருகைதந்திருந்தபக்தர்களுடனும் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கதிர்காமம் மகா தேவாலயத்தின் முன்னாள் பஸ்நாயக்க நிலமே, இராஜாங்க அமைச்சர் ஷேந்திர ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க, இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹரன்போல, கொழும்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷ, உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)







## பலாமரம் முறிந்து பாடசாலை கட்டடத்தில் வீழ்ந்தது 8 மாணவர்கள் படுகாயம் ; கேகாலையில் சம்பவம்

கேகாலை எக்கிரியாகலை கனிஷ்ட கல்லூரியின் மைதானத்தில் உள்ள பலா மரமொன்று பலத்த காற்றுக் காரணமாக வகுப்பறைக் கட்டடம் ஒன்றின் மீது வீழ்ந்ததில் 8 மாணவர்கள் காயமடைந்து கேகாலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமைஇடம்பெற்றுள்ளது. வகுப்பறைக் கட்டடத்தின் மீது வீழ்ந்த பலா மரம் மேற்கூரையில் இருந்த ஓடுகளை உடைத்ததால் 4 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களின் தலைகளில் ஓடுகள் வீழ்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காயமடைந்த எட்டுப் பேரும் ஓட்டோவில் அழைத்துச் செல்லப்பட்டு கேகாலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (05)

## 'ஹரக்கட்டா'வின் ஆலோசனையிலேயே கல்கிசை நீதிமன்றத்தில் ஒருவரைச் சுட்டுக்கொல்ல முயற்சி!

### குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவிப்பு

போதைப்பெருள் கடத்தல்காரரான 'ஹரக்கட்டா'வின் ஆலோசனையின் பேரிலேயே அண்மையில் கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் நபர் ஒருவரை சுட்டுக் கொல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பொது முறைப்பாட்டுபிரிவு அதிகாரிகள் இதனைக்கண்டுபிடித்துள்ளனர்.



துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மற்றும் அவரை வழி நடத்தியவரும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஓகஸ்ட் 4 ஆம் திகதி கல்கிசை நிதிவான் நீதிமன்ற மண்டபத்தில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரைக் குறி வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை, பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தியவர் நீதிமன்றத்தைவிட்டு வானில் தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## தூதரக உறவுகளை மீட்டெடுக்கும் வகையில் தூதுவர்களை நியமித்தது துருக்கி, எகிப்து

இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவுகளை மிக உயர்ந்த இராஜதந்திர மட்டத்தில் மீட்டெடுக்க துருக்கியும் மற்றும் எகிப்தும் தூதுவர்களை நியமித்துள்ளன.

செவ்வாயன்று துருக்கிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட கூட்டறிக்கையில், கெய்ரோவுக்கான தூதராக சாலிஹ் முட்லு சென் ஐ நியமித்ததாக அறிவித்துள்ளது.

மேலும் எகிப்து அம்ர் எல்ஹமாமியை அங்காராவுக்கான தூதராக நியமித்ததாகவும் கெய்ரோவும் அங்காராவும் கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் அதிகரிக்க இரு நாட்டு ஜனாதிபதிகளும் எடுத்த முடிவின்படி இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

## யாழ். மானிப்பாயில் வெடிபொருள் மீட்பு!





யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவு உயரப்புலம், அடைக்கலநாயகி தெருவில் உள்ள காணியில் இருந்து செவ்வாய்க்கிழமை 12 மணி அளவில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணியின் உரிமையாளர் தனது காணியில் குழி வெட்டிய போது ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் இருந்ததை அவதானித்தார். இந்நிலையில் அவர் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

அதனடிப்படையில் அங்கு சோதனையிட்டபோது 4- ரி 56 ரக துப்பாக்கிகள், தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்த ஆயுதங்களையும் தோட்டாக்களையும் மீட்ட மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் வருகை


முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய்பகுதியில் மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட குறித்த இடத்திற்கு சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் கடந்த செவ்வாய்க்கிழமை விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 29.06.2023 அன்று கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர்பிரிவில் மனித எச்சங்கள் சில இனங்காணப்பட்டன.

இந் நிலையில் கடந்த 30.06.2023அன்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

இந் நிலையில் குறித்த மனித எச்சங்கள் இனங்காணப்பட்ட பகுதியில், எதிர்வரும் 06.07.2023அன்று மேலதிக அகழ்வுகளை மேற்கொள்வதற்கு நீதிபதியால் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலிலேயே குறித்த இடத்திற்கு சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் விஜயமொன்றை மேற்கொண்டார். இந்த விஜயத்தின்போது சட்டத்தரணி இரட்ணவேலுடன் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



## போதைப்பொருள்களுடன் மூவர் பொத்துவிலில் கைது

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 3 வெவ்வேறு பகுதிகளில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருள்களுடன் மூவரைப் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

## கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 'பொத்துவில களுவா' பொலிஸாரினால் கைது

பல வீடுகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 'பொத்துவில களுவா' களுத்துறை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்துவில களுவா என அழைக்கப்படும் நபர் பல வீடுகளில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட 22 வயதுடையவர்.

வெசாக் வாரத்தில் சந்தேக நபர் பல வீடுகளை உடைத்து சொத்துக்களை திருடியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான திருடப்பட்ட சில பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நெருப்போடு களமாடும் பாரீஸ்

## 'தீ' வரலாறு தொடர்கின்றது



ஐங்கரன் விக்கினேஸ்வரா

பற்றி எரியும் பிரான்ஸ்! ஊடகங்களின் தற்கால தலைப்புச் செய்தி இதுதான்.கடந்த ஒரு வாரமாக பிரான்ஸ் முழுவதும் வன்முறை வெடித்துள்ளது. இதுபோன்று வன்முறைச் சம்பவங்கள் பிரான்ஸில் நடைபெறுவது இது முதல் முறையல்ல.

அமெரிக்காவில் இருப்பது போல் நிறவெறி பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் பரவலாக இன்றளவிலும் நீடித்து வருகிறது. இதற்கு ஓர் உதாரணம்தான் தற்போது 17 வயது சிறுவன் பிரான்ஸ் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள சம்பவம்.

இப்போது மட்டுமல்ல 1979லிருந்தே இதுதான் நிலைமை.

### 1979 'பான்லியூ' கலவரம்

1979ஆம் ஆண்டிலிருந்தே இதுபோன்ற கலவரங்கள் பல வெடித்து வருகிறன.லியோன் புறநகர் பகுதியான வால்க்ஸ்-என்-வெலினில் வட ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த உள்ளூர் இளைஞர் ஒருவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டார். இதை எதிர்த்து மக்கள் போராட்டங்களில் இறங்கினர். இது





'பான்லியூ' கலவரம் 1979 என்று அழைக்கப்படுகிறது.

அதேபோல 1991ஆம் ஆண்டு அரபு நாட்டை சேர்ந்த இளைஞர் ஒருவர் சூப்பர் மார்க்கெட் பாதுகாவலரால் சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்து கலவரம் பெரிய அளவில் வெடித்தது. இதே ஆண்டில் கார் திருடப்பட்டதாக ஒரு பெண் மற்றும் இளைஞர் ஒருவர் என இருவர் அடுத்தடுத்து காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவமும் பெரும் கலவரத்திற்கு அடித்தளமிட்டது.

இதன் பின்னர் 1992 மற்றும் 1995ஆம் ஆண்டுகளிலும் கலவரங்கள் அதிகளவு நடந்திருக்கின்றன. முதல் கலவரம் பொலீஸ் தடுப்பு நோக்கி சென்ற காரை அவர்கள் சுட்டனர் என்பதிலிருந்து தொடங்கியது. இதில் காரை ஓட்டி வந்த 18 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனால் காவல் நிலையத்திற்கு பொதுமக்கள் தீ வைத்தனர். அதேபோல இரண்டாவது சம்பவத்தில் அல்ஜீரிய தீவிரவாதி காலித் கெல்கலை பொலீஸ் சுட்டுக் கொலை செய்தது. இதனால் வன்முறை வெடித்தது.



### 2005இல் உச்சக்கட்ட பயங்கரம்

இந்தக் கலவரங்களின் உச்சமாக 2005ஆம் ஆண்டு நடந்த சம்பவங்கள் சொல்லப்படுகின்றன. பிரான்ஸ் தலைநகரமான பாரிஸின் வடக்கில் உள்ள பகுதியில் (Clichy-sous-Bois) இரண்டு இளைஞர்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்த முயன்றனர். ஆனால் அவர்கள் நிற்காமல் சென்றிருக்கின்றனர்.

இதனையடுத்து அவர்கள் மீது மின்சாரத்தை போலீசார் பாய்ச்சியுள்ளனர். இதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இச்சம்பவம் தொடர்ச்சியாக 3வாரம் வரை கலவரங்கள் தொடர்ந்தன.

இப்படியாக பல்வேறு வன்முறைகள் ஏற்பட்டுள்ளன. இதை தடுக்க முயலும்போது ஏற்படும் மோதல்களில் காவல்துறையினர் சிலரும், பொதுமக்கள் தரப்பில் சிலரும் உயிரிழப்பது தொடர் கதையாக நீடித்து வருகிறது.

### பிரான்ஸ் காவல் துறையில் இனப் பாகுபாடு

பிரான்ஸ் தனது காவல் துறையில் வேரூன்றியுள்ள இனப்பாகுபாடு பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவுறுத்தியுள்ளது.

பிரான்ஸ் கலவரம் குறித்து கவலை தெரிவித்துள்ள ஐ.நா. சபை, பிரான்ஸ் தனது காவல் துறையில் இனப் பாகுபாடு தொடர்புடைய ஆழமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். 17 வயது வட ஆபிரிக்க வம்சாவளி இளைஞன் பிரான்ஸில் காவல் துறையினரால் கொல்லப்பட்டது எங்களை கவலையடையச் செய்துள்ளது.

பிரான்ஸ் இனவெறி மற்றும் இனப் பாகுபாடு தொடர்புடைய ஆழமான பிரச்சினைகளை தீவிரமாகக் கையாள வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

அதே சமயம், சிறுவனைச் சுட்டுக்கொன்ற காவலர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பிரான்ஸ் கலவரம் குறித்தும் ஐ.நா. சபை கவலை தெரிவித்துள்ளது.

### ஓய்வூதிய சீர்திருத்த எதிர் போராட்டம்

இந்த ஆண்டு ஜனவரியில், மில்லியன் கணக்கான இளைஞர்களும் தொழிலாளர்களும் இமானுவல் மக்ரோனின் பரந்தளவில் செல்வாக்கற்ற ஓய்வூதிய சீர்திருத்தத்திற்கு எதிராக ஒரு சக்திவாய்ந்த போராட்டம் நடந்தது. இந்தப் போராட்டம் ஜூன் 6 அன்று முடிவடைந்தது. முக்கால்வாசி பிரெஞ்சு மக்களின் விருப்பத்திற்கு எதிராக திணிக்கப்பட்டது இந்தச் சீர்திருத்தம். மற்றும் இராணுவ நிரலாக்கச் சட்டத்தின் மூலம் 2020ஆம் ஆண்டு மீதமிருந்த 100 பில்லியன் யூரோக்கள் ஓய்வூதியத்திலிருந்து இராணுவத்திற்கு மாற்றப்பட்டது. இவற்றை எதிர்த்து போராட்டம் வெடித்தது.

பிரான்சில் தொழிலாள குடியேற்றவாசிகளுக்கு எதிரான சமூக அடித்தளமாக வளர்ப்பதற்கு, பொலீஸ்காரர்கள் மத்தியில் மிகவும் வன்முறையான பிற்போக்கு மனநிலைகளை தூண்டப்பட்டுள்ளதை இத்தகைய கலவரங்களின் மூல காரணமாக காணலாம்.

பிரான்ஸ் அதிபர் மக்ரோனின் ஜனாதிபதி காலம் முழுவதும், அடிப்படை சமூக மற்றும் ஜனநாயக உரிமைகள் மீதான அவரது தாக்குதல் கள் தொடர்ந்துள்ளன. மற்றும் சமூக செலவினங்களில் பில்லியன் கணக்கான யூரோக்களை நேட்டோ மறு ஆயுதமாக்கல் மற்றும் ரஷ்யாவுடனான போருக்கு திருப்பும் அவரது கொள்கை, ஆகியவற்றுக்கு எதிரான பெரும் தொழிலாள வர்க்க எதிர்ப்பை கொடூரமாக ஒடுக்க இந்த பொலிஸ் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டன என்றும் பரவலான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

### தற்போதைய பாரிஸ் கலவரம்

பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் நான்டேர் (Nanterre) பகுதியில் 17 வயது இளைஞர் நஹேல் என்பவர் ஜூன் 27 செவ்வாய்க்கிழமை அன்று போக்கு-வரத்து சிக்னலில் நின்றபோது காரை நிறுத்துமாறு பொலிஸார் துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளனர். ஆனால், நஹேல் அதற்கு கட்டுப்படாமல் காரை நிறுத்தாமல் சென்றதாகவும் பொலிஸார் மீதே காரை ஏற்றியதாகவும் இதனால் தற்காப்புக்காக நஹேலை பொலிஸார் சுட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால், இளைஞரை பொலிசார் துப்பாக்கியால் மிரட்டுவது போலவும் கார் நகர்ந்ததால் பின்னர் பொலிசார் நஹேலை சுட்டதும் அங்குள்ள சிசிடிவி கமராக்களில் பதிவாகியுள்ளன. இது குறித்த வீடியோவும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்த இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாரிஸ் நகரில் போராட்டம் தொடங்கியது. தொடர்ந்து பிரான்ஸின் பல்வேறு நகரங்களில் போராட்டங்கள், பேரணிகள் நடைபெற்றன. நாட்டின் பெரிய நகரமான மார்செய் தற்போது கலவரபூமியாக காட்சியளிக்கிறது.

போராட்டக்காரர்கள் பொது இடங்களில் உள்ள கார்களுக்குத் தீ வைத்தல், அரசு கட்டடங்கள் மீது தாக்குதல், சூறையாடுதல் என கலவரத்தில்ஈடுபட்டுவருகின்றனர். போராட்டத்தில் சிறுவர்களும் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

சில பகுதிகளில் இன்னமும் போராட்டக்காரர்களுக்கும் காவல்துறையினருக்கும்இடையே மோதல் நீடித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் மார்செய் நகரின் ஒரு துப்பாக்கிக் கடையில் புகுந்து போராட்டக்காரர்கள் துப்பாக்கிகளைத் திருடிச்சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அரசுத் தரப்பில் வன்முறையைக் கட்டுப்படுத்த பதற்றமான பகுதிகளில் 40,000 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். தலைநகர் பகுதிகளில் பொதுப் போக்குவரத்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப்போராட்டம்தொடாபாக இதுவரை 1,000 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். வன்முறைச் சம்பவங்களில் சுமார் 200 பொலிஸார் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பாரீஸ் இப்படி அடிக்கடி பற்றிக்கொண்டு எரிவதைத் தடுக்கவேண்டுமானால் பொலிஸார் தமது இனவெளி மனோநிலைக்கு முடிவு கட்டவேண்டும்.



**1992 மற்றும் 1995ஆம் ஆண்டுகளிலும் கலவரங்கள் அதிகளவு நடந்திருக்கின்றன. முதல் கலவரம் பொலிஸ் தடுப்பு நோக்கி சென்ற காரை அவர்கள் சுட்டனர் என்பதிலிருந்து தொடங்கியது. இதில் காரை ஓட்டி வந்த 18 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனால் காவல் நிலையத் திற்கு பொதுமக்கள் தீ வைத்தனர். அதேபோல இரண்டாவது சம்பவத்தில் அல்ஜீரிய தீவிரவாதி காலித் கெல் கலை பொலிஸ் சுட்டுக் கொலை செய்தது. இதனால் வன்முறை வெடித்தது.**


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

காலைக்கதிர்
Kalaikkathir

# தரிந்து உடுவரகெதரவை குற்றப்புலனாய்வுக்கு அழைத்தமை ஊடகங்களை அடக்கும் மற்றுமொரு நடவடிக்கையாகுமாம்!

## ஊடக சேவை தொழிற்சங்க சம்மேளனம் அறிக்கை

ஊடகவியலாளர் தரிந்து உடுவர கெதரவை குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைத்து விசாரணைமேற்கொண்டிருக்கின்றமைஊடகங்களை அடக்கும் மற்றுமொரு நடவடிக்கையாகும் என ஊடக சேவை தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் தரிந்து உடு வரகெதர செவ்வாய்க்கிழமை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக ஊடக சேவை தொழிற்சங்க சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவைவருமாறு-

ஊடகவியலாளர் தரிந்து உடு வரகெதரவை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைத்து விசாரணை மேற் கொண்டிருக்கின்றமை ஊடகங்களை அடக்கும் மற்றுமொரு நடவடிக்கையா கும். சில மாதங்களுக்கு முன்னரும் இவர் இவ்வாறு குற்றப்புலனாய்வு விசாரணைதிணைக்களத்துக்குஅழைக்கப்பட்டிருப்பது மூன்றாவது தடவையாகும்.

அரசாங்கத்தால் ஊடக ஒழுங்கு படுத்தல் அதிகாரசபைசட்டமூலம், சமூகவலைத்தளஒழுங்குபடுத்தல் சட்டமூலம்போன்றபலஅடக்குமுறைசட்டமூலங்களை பிரேரித்துள்ள சந்தர்ப்பத்திலே இவ்வாறு ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். அதனால் ஊடகவியலாளர்தரிந்துஉடுவரகெதரகுற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டமையானது கருத்து தெரிவிக்கும் அடிப்படை உரிமைக்கு எதிரான செயலாகவே காண்கிறோம். ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கடந்த மே மாதம் 29ஆம் திகதி மருதானை சமூக கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது தெரிவித்திருந்த விடயங்கள் தொடர்பாக வாக்கு மூலம் பெற்றுக்கொள்ளவே இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் செவ்வாய்க்கிழமை காலை 10,30 மணிக்கு அவர் குற்றப்புலனாய்வுதிணைக்களத்துக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)







# கேள்வி அறிவித்தல்

## பருத்தித்துறை நகரசபை

1) தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப் படுகின்றன.

2) தேசிய போட்டிக் கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30ஆந் திகதிய 04/2016(i) இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி வட மாகாண எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட பெறுகைதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

3) கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி கட்டட/ வீதிப்புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

4) தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5) ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்:- 021-226-3213) மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

6) பெறுகைப் பத்திரங்கள் 07.07.2023 ந் திகதி தொடக்கம் 21.07.2023 ந் திகதி வரை அலுவலக நாள்களில் பார்வையிடலாம். அத்துடன் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 3000/= இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7) பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு 24.07.2023 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகை நேரம் முடிவடைந்தஉடனேயே வருகைதரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.

8) பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து அறுபத்து மூன்று (63) நாட்கள் 24.09.2023 வரையும் செல்லுபடியாகும்.

9) பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 12.07.2023 ஆந் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும். சொந்த செலவில் பங்குபற்றலாம்.

10) பெறுகை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கே உண்டு.

11) கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைத்திட்டம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு ரூபா | செல்லு படியாகும் காலம் |
| 1 | நெல்லண்டை கிழக்கு வீதி 4ம், 1ம் ஒழுங்கை நிர்மாணம் (மீள்கேள்வி) | 1.86 | 60 நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 19,000.00 | 23.10.2023 |
| 2 | கல்லூரி வீதி வாய்க்கால் நிர்மாணம் (மீள்கேள்வி) | 0.49 | 60 நாட்கள் | சபை நிதி 2022,2023 | C9/C8 | 5,000.00 | 23.10.2023 |
| 2 | பருத்தித்துறை மீன் சந்தை வளாகத்தில் குளிரூட்டி அறை (Cool Room) அமைத்தல் | 7.02 | 60 நாட்கள் | பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP) 2023 | C8/C7 | 70,500.00 | 23.10.2023 |

**தலைவர்**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு**
**பருத்தித்துறை நகரசபை பருத்தித்துறை.**
**2023.07.06**



# புத்தளத்தில் வீசிய பலத்த காற்றால் நகரசபை கடைத் தொகுதி சேதம்







பலத்த காற்று வீசியதால் புத்தளம் நகரசபை கடைத் தொகுதியின் கூரைத் தகடுகள் அள்ளுண்டு சென்றுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுவதால் பாதுகாப்பாக செயற்படுமாறு புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் பலத்த காற்று வீசியதால் புத்தளம் நகரசபைக் கடைத் தொகுதியின் இரண்டு கடைகளின் கூரைத் தகடுகள் காற்றால் அள்ளுண்டுசென்றுள்ளன.

இதனையடுத்துபுத்தளம்மாவட்டஅனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் புத்தளம் நகரசபை ஊழியர்கள் இணைந்து திருத்தப்பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# காதலனை கடத்திசென்ற காதலி தீவிர விசாரணையில் பொலிஸார்

களுத்துறை, பின்வத்த பிரதேசத்தில் காதலனை கடத்தி சென்ற காதலியை தேடிபொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காதல் உறவில் இருந்து பின்வாங்கிய இளைஞனை கடத்தியதாக முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பாதுகாப்பு படையினருக்கு தொடர்புடைய யுவதி உட்பட குழுவினரை தேடிசெவ்வாய் இரவு விசாரணைகளை ஆரம்பித்ததாக பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

செவ்வாய் பிற்பகல் பின்வத்த பிரதேசத்தில் வசிக்கும் கடத்தப்பட்ட இளைஞனும்அவரது தாயும் செய்தமுறைப்பாட்டையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட இளைஞனும் கடத்திய யுவதியும் காதலித்து வந்தார் எனவும், குறித்த இளைஞன், யுவதியை திருமணம் செய்து கொள்ள விரும்பாத காரணத்தால் இந்த கடத்தல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்வத்த பகுதியில் ஓட்டோவில் பலருடன் வந்த யுவதி, இளைஞனை கடத்திச் சென்று வெறிச்சோடிய வீடொன்றில் மறைத்து வைத்துமீண்டும்விடுவித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். கடத்தலை மேற்கொண்டதாக கூறப்படும் யுவதி மற்றும் அவருடன் வந்த நபர்களை கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# ருவிட்டருக்கு போட்டியாக புதிய செயலி; மெட்டா நிறுவனத்தின் அதிரடி அறிவிப்பு



முகப்புத்தகம் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றின் தாய் நிறுவனமாக மெட்டா என்ற புதிய மைக்ரோ பிளாக்கிங் செயலியை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த செயலி இன்று (வியாழக்கிழமை) பயனர்களின்பாவனைக்குவெளியிடப்படும்என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்ஸ்டாகிராம் பயனர்கள், இந்தச் செயலி யிலும் தங்களுக்குப் தேவை யான கணக்குகளை பின் தொடரலாம் என்று கூறப் படுகிறது.

அதுமட்டுமின்றி, இன்ஸ்டாகிராமில் உள்ள அதே பயனர் பெயரை வைத்திருக்கலாம் என கூறப்படுகிறது.

ருவிட்டர்பக்கத்தில்அதன்பயனாளர்கள் ஒரு நாளைக்கு எத்தனை பதிவுகளை பார்வையிடலாம்என புதிய கட்டுப்பாடுகளை எலான் மஸ்க் அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் ருவிட்டரில் எலான் மஸ்க் செய்யும் மாற்றங்களுக்கு விமர்சனங்கள் குவியும் நிலையிலே, மெட்டா நிறுவனம் தனது புதிய செயலியை அறிமுகம் செய்ய முனைவதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

செயலி ஆப்பிள் நிறுவனத்தின் ஆப் ஸ்டோரில் இடம்பெற்றுள்ளது. எனினும் கூகுள் ப்ளே ஸ்டோரில் இந்த செயலி எப்போது அறிமுகம் செய்யப்படும் என மெட்டா நிறுவனம் இதுவரை எந்த தகவலையும்வெளியிடவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (05)

## நிர்வாகச் ....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

கியுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் தேவையற்ற செலவானது நாட்டின் பொருளாதார சீர்கேட்டிற்கு மேலும் உரமூட்டுவதுடன், பனைத்தொழிலை நம்பி வாழும் வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. வடக்கு-கிழக்கில் பனை வளத்துடன் ஈடுபாடுகொண்ட படித்த தகுதி வாய்ந்த இளைஞர்கள், யுவதிகள் ஆயிரக்கணக்கில் இருக்கையில் இந்தத் துறையுடன் தொடர்பில்லாத 25இற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர் யுவதிகளை பனை அபிவித்திச்சபை உள்வாங்கியிருப்பதும் இவர்களும் பெருமளவில் கொழும்பை மையமாகக் கொண்டு பணியாற்றி வருவதும் பனை அபிவிருத்தி சபை கீழ்நோக்கிச் செல்வதற்குக் காரணமாக அமைகின்றது.

பனை அபிவிருத்திசபையானது கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, பருத்தித்துறை, திக்கம் பிரதேசத்தில் ஒரு வடிசாலையை நடத்தி வந்தது. மிகவும் இலாபகரமாக இயங்கிவந்த இந்த வடிசாலையினால் 3000 தொழிலாளர்கள் பயன்பெற்று வந்தார்கள். இந்த வடிசாலையானது பல்வேறு சந்தர்ப்பங்களில் வடக்கில் பொறுப்பாக இருந்த அமைச்சர்களினால் சூரையாடப்பட்டது. இவ்வளவு கொள்ளைகளும்சூரையாடல்களும் இடம்பெற்ற பின்னரும்கூட அது தொடர்ந்தும் இலாபத்திலேயே இயங்கி வந்தது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வடிசாலை மூடப்பட்டதன்காரணத்தினால் இந்த வடிசாலைக்கு கள்ளை விநியோகித்துவந்த தொழிலாளிகளும்பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரைகாலமும் திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச்சங்கங்களின் சமாசம் நடத்தி வந்தது. வடிசாலைக்கான உரிமம், பனம் சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கும் விற்பதற்குமான உரிமம் அனைத்தும் பனை அபிவிருத்திச் சபையின் பெயரில் சமாசங்களிடமே இருந்தன. ஆனால் இப்பொழுதுஇருக்கின்றபனைஅபிவிருத்திச்சபையின்தலைவரான சிங்களப் பெருமகன், இந்த உரிமங்களை சிங்கள நபர் ஒருவருக்கு அளித்துள்ளதாக அறியமுடிகிறது. இதனால் பனை வளச் சங்கங்கள் சமாசங்கள், அதன் கூட்டுறவு நடவடிக்கைகள் அனைத்தும் முடக்கப்படுவதுடன் இந்த சகல வருமானங்களையும் ஒரு தனிநபருக்கு அளிக்க முற்பட்டமையானது ஒட்டுமொத்த பனை அபிவிருத்தி முயற்சியையும்சீர்குலைக்கும் செயற்பாடாகும். இந்தநடவடிக்கைகளின் காரணமாக, பனம்பொருள் உற்பத்தியும் அதன் ஏற்றுமதியும் மிக மோசமாகப் பாதிப்படைந்திருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்கும் பங்களித்துள்ளது.

அமைச்சர்களின் அற்பத்தனமான, முன்யோசனையற்றபதவிவழங்கல்களானது பனைவள அபிவிருத்தியை எவ்வளவுதூரம் பாதித்திருக்கிறது என்பதை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல்ரீதியான முறையற்ற முகாமைத்துவமும், சீரற்ற நிர்வாக முகாமைத்துவமும் இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதித்திருப்பதை கடந்தஇரண்டுவருடங்களாக நாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில், பனைவள அபிவிருத்திச் சபைக்கான அதனை திறம்பட நடாத்துவதற்கான இலாபமீட்டும்ஒருதுறையாக மாற்றுவதற்கானநடவடிக்கைகளை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மேற்கொள்ள வேண்டும்.

1. வடக்கு மாகாணத்தின் தலைமைச்செயலகத்தை வினைதிறனாக இயங்க வைப்பதுடன் பல இலட்சங்களை வாடகையாக விழுங்கி ஏப்பம்விடும்கொழும்புசெயலகம் மூடப்படவேண்டும். அங்குள்ள அனைத்து கட்டமைப்புகளும் ஏற்கனவே உள்ள அரசஆணைகளுக்கிணங்க, யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்படவேண்டும்.

2. பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக பனைவளத்தில் பரிச்சியமும் அத்துறையை அபிவிருத்தி செய்வதில் ஊக்கமும் அனுபவமும் கொண்ட சரியான நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

3. பனைவள கூட்டுறவு சபைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் பனை வளத்தை அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள், சமாசங்கள் அதற்கென வழங்கிவரும் உதவிகள் ஒத்தாசைகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

4. திக்கம் வடிசாலைக் குரித்தானஅனைத்துஉரிமங்களும்வழங்கப்பட்டுமுன்னர் இதனை இயக்கிவந்த சமாசங்களுக்கே இவற்றைத் தொடர்ந்தும் இயக்குவதற்கான அனுமதி அளிக்கப்படவேண்டும்.

5. நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் அதிகளவு அக்கறைகொண்டுள்ளதாகக் கூறிக்கொள்ளும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இதில் கூடுதல் கவனம் செலுத்தி பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு கோருகின்றோம்.

6. தனியாரை ஊக்குவித்து கூட்டுறவுத்துறையை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, கூட்டுறவுத்துறையை ஊக்குவித்து அவற்றை ஏற்கனவே இருந்ததுபோல் இலாப மீட்டும் துறையாகவும் வினைதிறன் மிக்கதாகவும் செயற்படுவதற்கு உதவுமாறு சகலரையும் கோருகிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரணில் முன்பு போன்று இல்லையாம் பகிரங்கமாகச் சாடிய பொன்சேகா



அரசாங்கத்துடன் கைகோர்க்கப்போவதில்லை எனநாடாளுமன்றஉறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மீண்டும்வலியுறுத்தியுள்ளார்.

மேலும் கூறுகையில், இலங்கை குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. திருடர்கள் நடத்தும் எந்த முயற்சிக்கும் உதவப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க, தங்களுடன் இணைந்து பணியாற்றிய போது இருந் ததை விட தற்போது வித்தியாசமானவர். ஊழலுக்கும் கொள்ளைக்கும் உதவுவதற்காக நாங்கள் இங்குவரவில்லை. மக்களின் ஆணையைப்பெற்றுநாட்டை அபிவிருத்தி செய்வதற்காக வந்துள்ளோம்என்றும்பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (05)

## இந்தியா சுற்றுலா அமைப்பின் மாநாடு கொழும்பில் ஏற்பாடு

இந்தியாவின் மிகப்பெரியசுற்றுலாஅமைப்பான டிராவல் ஏஜென்ட் அசோசியேன் ஆஃப் இந்தியா 18 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

குறித்தநிறுவனம்தனது விமானப் பங்காளியான ஸ்ரீலங்கன்ஏர்லைன்ஸுடன் இணைந்து 67 ஆவது மாநாட்டை 2023 ஜூலை 06 முதல் 09 வரை கொழும்பில் நடத்தவுள்ளது.

இந்திய சுற்றுலா வர்த்தகத்தின் முதன்மையான வருடாந்த நிகழ்வான இந்த மாநாடு, பல வருட பின்னடைவைத் தொடர்ந்து இலங்கைக்கான இந்திய சுற்றுலாவை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் சுற்றுலாவை வடிவமைப்பதில் இந்த சங்கம் முக்கிய பங்கு வகிப்பதுடன் விமான நிறுவனங்கள், உட்பட இந்திய பயணத் துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த ஆண்டு மாநாட்டுக்கு ஏறக்குறைய 450 முகவர்கள் மற்றும் 50 சர்வதேச பயண ஊடக பிரமுகர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (05)

## மலையகத்துக்கான ரயில் சேவை பாதிப்பு

மலையக ரயில் பாதையில் புகையிரதம் ஒன்று தடம் புரண்டதன் காரணமாக ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட்டகொடை மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கு இடையிலேயே ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளது. (05)

## விபத்துக்களின் எண்ணிக்கை நாட்டில் சடுதியாக அதிகரிப்பு

இலங்கையில்ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கும் ஒருமுறை, விபத்துகள் காரணமாக, நான்கு பேர் வரையில் மரணிக்கின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் முகாமையாளர், விசேட வைத்தியர் சமித சிறிதுங்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அதாவதுநாளொன்றுக்கு, 32 முதல் 35 பேர்வரையில், விபத்துகளால் மரணிக்கின்றநிலையில் வாகன விபத்துகள், தற்கொலைகள், நீரில் மூழ்குதல், வீழ்தல் மற்றும் மின்சாரத் தாக்கத்துக்கு இலக்காகுதல் உள்ளிட்ட காரணிகளால் குறித்த மரணங்கள் சம்பவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இது மிகவும் மோசமான நிலைமையாகும். எனவே, இதனைத் தடுப்பதற்கு பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுவதே அவசியமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்
076 443 80 22









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.07.2023இல் வெளியிடப்பெற்றது.